भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, मगंलवार, 18 जूलाई, 2000/1922 सका

New Delhi, Tuesday, 18th July 2000/1922 Saga

*புது தில்லி, 2000, ஜூலை 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1922 சக*

The Translation in Tamil of the Opium and Revenue Laws (Extension of Application) Act, 1950 (33/1950), The Legal Services Authorities Act, 1987 (39/1987) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

*அபின் மற்றும் வருவாய்ச் சட்டங்கள் (பொருந்துதலை நீட்டித்தல்) சட்டம், 1950 (33/1950), சட்டப்பணிகள் அதிகாரஅமைப்புகள் சட்டம், 1987 (33/1987) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு (2)இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 16.00

# சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் சட்டம், 1987.

(சட்ட எண் 39/1987)

[1987, அக்டோபர் 11]

பொருளாதாரம் அல்லது பிற இயலாமையின் காரணமாக குடிமகன் எவருக்கும் நீதியைப் பெறுவதற்காக வாய்ப்பு மறுக்கப்படாதிருப்பதை உறுதி செய்வதற்காக, சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்கு இலவசமாகத் தகுதிறமுள்ள சட்டப் பணிகளுக்கு வகை செய்வதற்காக, சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் ஏற்படுத்துவதற்கும், சட்டமுறையின் செயற்பாடானது சம வாய்ப்பின் அடிப்படையில் நீதியை வளர்ப்பதை உறுதி செய்வதற்காக மக்கள் நீதிமன்றங்களை அமைப்பதற்குமான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் முப்பத்து எட்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக :—

## அத்தியாயம் I

## முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் சட்டம், 1987 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியில் செல்லாற்றல் பெறும், மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களுக்கும், வெவ்வேறு மாநிலங்களுக்கும் வெவ்வேறு தேதிகள் குறித்திடப் படலாம்; மற்றும் மாநிலம் எதன் தொடர்பாகவும் இந்தச் சட்டத்தின் வகையம் எதனின் தொடக்கம் பற்றிய சுட்டுகை எதுவும், அந்த மாநிலத்தில் அந்த வகையத்தின் தொடக்கம் பற்றிய சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— பொருள் வரையறைகள்.

[1](அ) ''வழக்கு'' என்பது, நீதிமன்றம் ஒன்றின் முன்புள்ள ஓர் உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதனையும் உள்ளடக்கும்;

(அஅ) ''மைய அதிகார அமைப்பு'' என்பது, பிரிவு 3இன்படி அமைக்கப்பட்ட தேசிய சட்டப்பணிகள் அதிகார அமைப்பு என்று பொருள்படும்.

(அஅஅ) ''நீதிமன்றம்'' என்பது, ஓர் உரிமையியல், குற்றவியல் அல்லது வருவாய்த்துறை நீதிமன்றம் என்று பொருள்படும், மற்றும் தீர்ப்பாயத்தை அல்லது நீதிமுறை அல்லது நீதி முறைச் சார்புடைய செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் அமைக்கப்பட்ட பிற அதிகார அமைப்பு எதனையும் உள்ள டைக்கும்;]

(ஆ) ''மாவட்ட அதிகார அமைப்பு'' என்பது, பிரிவு 9இன்படி அமைக்கப்பட்ட ஒரு மாவட்டச் சட்டப்பணிகள் அதிகார அமைப்பு என்று பொருள்படும் ;

[2][(ஆஆ) ''உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழு'' என்பது, பிரிவு 8(இ)இன்படி அமைக்கப்பட்ட ஓர் உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழு என்று பொருள்படும்;]

(இ) ''சட்டப்பணி'' என்பது, நீதிமன்றம் அல்லது பிற அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயம் எதன் முன்பும் உள்ள வழக்கு அல்லது சட்ட நடவடிக்கை எதனையும் நடத்துவதில் பணி எதனையும் செய்வதையும் சட்டப் பொருட்பாடு எதனைப் பற்றியும் அறிவுரை கூறுவதையும் உள்ளடக்கும் ;

---

[1] சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 2ஆல் கூறு (அ)வுக்கு மாற்றாக அமைக்கப்பட்டன.

[2] சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 2ஆல் புகுத்தப் பட்டது.

(ஈ) ''மக்கள் நீதிமன்றம்'' என்பது, அத்தியாயம் VIஇன்படி அமைக்கப்பட்ட ஒரு மக்கள் நீதிமன்றம் என்று பொருள்படும்;

(உ) ''அறிவிக்கை'' என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஓர் அறிவிக்கை என்று பொருள்படும் ;

(ஊ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளின்படி வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும் ;

[1][(ஊஊ) ''ஒழுங்குறுத்தும் விதிகள்'' என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும் விதிகள் என்று பொருள்படும் ;]

(எ) ''திட்டம்'' என்பது, இந்தச் சட்டத்தின் வகையங்களில் எதனையும் செல்திறப்படுத்தும் நோக்கத்திற்காக, மைய அதிகார அமைப்பினால், ஒரு மாநில அதிகார அமைப்பினால் அல்லது ஒரு மாவட்ட அதிகார அமைப்பினால் வனையப்பட்ட திட்டம் எதுவும் என்று பொருள்படும் ;

(ஏ) ''மாநில அதிகார அமைப்பு'' என்பது, பிரிவு 6இன்படி அமைக்கப்பட்ட ஒரு மாநில சட்டப்பணிகள் அதிகார அமைப்பு என்று பொருள்படும் ;

(ஐ) ''மாநில அரசாங்கம்'' என்பது, அரசமைப்பின் உறுப்பு 239இன்படி குடியரசுத் தலைவரால் அமர்த்தப்பட்ட ஓர் ஒன்றியத்து ஆட்சி நிலவரையின் ஆளுகையரையும் உள்ளடக்கும் ;

[2][(ஒ) ''உச்சநீதிமன்ற சட்டப் பணிகள் குழு'' என்பது, பிரிவு 3(அ)இன்படி அமைக்கப்பட்ட உச்சநீதிமன்ற சட்டப் பணிகள் குழு என்று பொருள்படும் ;]

(2) பிற செய்சட்டம் எதனையும் அல்லது அதன் வகையம் எதனையும் குறித்த இந்த சட்டத்திலுள்ள சுட்டுகை எதுவும், அத்தகைய செய்சட்டம் அல்லது வகையம் செல்லாற்றலில் இராத ஒரு பரப்பிடத்தைப் பொறுத்த மட்டில், அந்தப் பரப்பிடத்தில் செல்லாற்றலிலுள்ள நேரிணையான சட்டம் அல்லது நேரிணையான சட்டத்தின் தொடர்புடைய வகையம் பற்றிய ஒரு சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் II.

### தேசிய சட்டப் பணிகள் அதிகார அமைப்பு

தேசிய சட்டப் பணிகள் அதிகார அமைப்பினை அமைத்தல்.

[3][3. (1) மைய அரசாங்கமானது, இந்தச் சட்டத்தின்படி மைய அதிகார அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ள அல்லது குறித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் செயற்பணிகளைப் புரிவதற்கும் தேசிய சட்டப் பணிகள் அதிகார அமைப்பு எனப்படும் ஒரு குழுமத்தை அமைத்தல் வேண்டும்.

(2) மைய அதிகார அமைப்பானது, பின்வருபவர்களைக் கொண்டதாக இருக்கும் :—

(அ) இந்தியத் தலைமை நீதிபதி, அவர் தலைமைப் புரவலராக இருப்பார் ;

(ஆ) குடியரசுத்தலைவர் இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து நியமிக்கும் உச்சநீதிமன்றப் பணியிலிருக்கும் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர், அவர் செயற்குழுத் தலைவராக இருப்பார் ; மற்றும்

(இ) மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் பட்டறிவையும் தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளவர்களும் அந்த அரசாங்கத்தால் இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து நியமனம் செய்யப்பட வேண்டியவர்களுமான எண்ணிக்கையில் பிற உறுப்பினர்கள் ;

---

[1] சட்டப் பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 2ஆல் புகுத்தப்பட்டது.

[2] சட்டப் பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 3ஆல் புகுத்தப்பட்டது.

[3] மேற்படிச் சட்டத்தின் பிரிவு 3ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(3) மைய அரசாங்கமானது, இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மைய அதிகார அமைப்பின் செயற்குழுத் தலைவரின் கீழ், அந்த அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் அல்லது அந்த அதிகார அமைப்பின் செயற் குழுத் தலைவரால் அவருக்குக் குறித்துரைக்கப் படலாகும் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் கடமைகளைப் புரிவதற்கும் அந்த அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் பட்டறிவையும் தகுதிப் பாடுகளையும் பெற்றுள்ள ஒரு நபரை மைய அதிகார அமைப்பின் உறுப்பினர்–செயலராக அமர்த்துதல் வேண்டும் ;

(4) மைய அதிகார அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்–செயலரின் பதவிக் காலங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக் கட்டுகள், இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகுமாறு இருத்தல் வேண்டும்.

(5) மைய அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி தன் செயற் பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்கு இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் எண்ணிக் கையில் அலுவலர்களையும் பிற பணிபுரிபவர்களையும் அமர்த்தலாம்.

(6) மைய அதிகார அமைப்பின் அலுவலர்களும், பிற பணிபுரிபவர் களும் மைய அரசாங்கத்தால் இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து வகுத்துரைக்கப்படலாகும் வரையூதியங்களுக்கும் படித்தொகை களுக்கும் உரிமை கொண்டவராவர் ; மற்றும் அத்தகைய பிற பணி வரைக் கட்டுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(7) மைய அதிகார அமைப்பின் உறுப்பினர்-செயலர், அலுவலர்கள் மற்றும் பிற பணிபுரிபவர்களுக்கு வழங்கத்தக்க வரையூதியங்கள், படித் தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள் உள்ளடங்கலாக, மைய அதிகார அமைப் பின் நிருவாகச் செலவுகள், இந்தியத் திரள் நிதியத்திலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.

(8) மைய அதிகாரஅமைப்பின் ஆணைகள் மற்றும் முடிவுகள் அனைத் தும், உறுப்பினர்–செயலரால் அல்லது அந்த அதிகார அமைப்பின் நிருவாகத் தலைவரால் உரியவாறு அதிகாரமளிக்கப்பெற்ற மைய அதிகார அமைப்பின் பிற அலுவலர் எவராலும் உறுதிச் சான்றிடப்படுதல் வேண்டும்.

(9) மைய அதிகாரஅமைப்பின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அந்த மைய அதிகாரஅமைப்பு காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தின் பேரில் மட்டுமே செல்லாநிலையதாகாது].

**உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழு.**

[1][3 இ (1) மைய அதிகாரஅமைப்பானது, மைய அதிகாரஅமைப் பினால் வகுக்கப்படும் ஒழுங்குமுறைகளால் தீர்மானிக்கப்படலாகும் அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும், செயற் பணிகளைப் புரிவதற்காகவும் உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழு எனப்படும் குழு ஒன்றினை அமைத்தல் வேண்டும்.

(2) அந்தக் குழு, பின்வருபவர்களைக் கொண்டதாக இருக்கும்.—

(அ) உச்ச நீதிமன்றத்தில் அமர்வு நீதிபதி ஒருவர் ; அவர் தலைவராக இருப்பார், மற்றும்

(ஆ) மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் பட்டறி வையும் தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளவர்களும் இந்தியத் தலைமை நீதிபதியால் நியமிக்கப்படவேண்டியவர்களுமான எண்ணிக்கையில் பிற உறுப்பினர்கள்.

(3) இந்தியத் தலைமை நீதிபதி, மைய அரசாங்கத்தால் வகுத்துரைக் கப்படலாகும் பட்டறிவையும் தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ள ஒரு நபரை, குழுவின் செயலாளராக அமர்த்துவார்.

---

[1] சட்டப்பணிகள் அதிகாரஅமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994) இன் பிரிவு 3 ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(4) குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளரின் பதவிக்காலங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக்கட்டுகள், மைய அதிகார அமைப்பினால் வகுக்கப்படும் ஒழுங்குறுத்தும் விதிகளினால் தீர்மானிக்கப்படலாகுமாறு இருத்தல் வேண்டும்.

(5) குழுவானது, தன் செயற்பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்காக, இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் எண்ணிக்கையில் அலுவலர்களையும் பிற பணி புரிபவர்களையும் அமர்த்தலாம்.

(6) குழுவின் அலுவலர்களும் பிறபணிபுரிபவர்களும் இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் வரையூதியத்திற்கும் படித்தொகைகளுக்கும் உரிமைகொண்டவராவர் மற்றும் அத்தகைய பிற பணிவரைக்கட்டுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

**மைய அதிகார அமைப்பின் செயற்பணிகள்.**

4. மைய அதிகார அமைப்பு, பின்வரும் செயற்பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் புரிந்துவரும்; அவை யாவன :—

(அ) இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி கிடைக்கத்தக்க சட்டப் பணிகளைச் செய்வதற்கான கொள்கைகளையும், நெறிகளையும் வகுத்தல் :

(ஆ) இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி கிடைக்கத்தக்க சட்டப் பணிகளைச் செய்யும் நோக்கத்திற்காக மிகவும் பயனளிக்கக்கூடிய சிக்கனமான திட்டங்களை வனைதல் ;

(இ) தன் கையிருப்பிலுள்ள நிதியங்களைப் பயன்படுத்துதல் மற்றும் மாநில அதிகார அமைப்புகளுக்கும், மாவட்ட அதிகார அமைப்புகளுக்கும் நிதியத்தை உரியவாறு ஒதுக்கீடு செய்தல்;

(ஈ) நுகர்வோர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அல்லது சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குச் சிறப்பாக தொடர்புடைய பிற பொருட்பாடு எதன் தொடர்பாகவும் சமுதாய நீதிவழக்கு என்ற வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்; மற்றும் இந்த நோக்கத்திற்காக சமுதாயப் பணியாளர்களுக்கு சட்டத்திறப்பாடுகளில் பயிற்சியளித்தல் ;

(உ) சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்குள்ள அவர்களின் உரிமைகள் குறித்து அறிவூட்டுதல், மக்கள் நீதிமன்றங்கள் மூலமாகப் பூசல்களைத் தீர்ப்பதற்கு ஊக்கமளித்தல் ஆகிய இரு நோக்கங்களுக்காகவும், குறிப்பாக ஊரகப்பகுதிகளில், குடிசைப்பகுதிகளில் அல்லது தொழிலாளர் குடியிருப்புகளில் சட்ட உதவி முகாம்களை நடத்துதல் ;

(ஊ) பூசல்களைச் சமரசப்பேச்சுக்கள், நடுவர் தீர்ப்பு அல்லது இணக்கத் தீர்வு வாயிலாகத் தீர்ப்பதற்கு ஊக்குவித்தல் ;

(எ) ஏழைகளிடையே இத்தகைய சட்டப்பணிகளின் சிறப்பான தேவை குறித்து சட்டப்பணிகள் துறையில் ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதலும் அதனை ஊக்குவித்தலும் ;

(ஏ) அரசமைப்பின் பகுதி IV(அ) இன்படி குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் பொறுத்த கடப்பாட்டினை நிறைவேற்றுவதை உறுதி செய்யும் நோக்கத்திற்குத் தேவையான அனைத்தையும் செய்தல் ;

(ஐ) சட்ட உதவிச் செயல் முறைத் திட்டங்களை நிறைவேற்றுவதைக் கால இடைவெளிகளில் கண்காணித்துத் தெரிவித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் மற்றும் இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள நிதியங்கள் மூலம், முழுவதுமாக அல்லது பகுதியாக நிறைவேற்றப்படும் செயல்முறைத் திட்டங்கள், திட்டங்கள் பற்றிச் சுதந்திரமாக மதிப்பீடு செய்வதற்கு வகை செய்தல்;

(ஒ) [1][இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி சட்டப்பணிக்கான திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக தன் கையிருப்பிலுள்ள தொகைகளிலிருந்து பல்வேறு தம்விருப்பான சமுதாயபணிபுரியும் நிறுவனங்களுக்கும் மாநில மற்றும் மாவட்ட அதிகார அமைப்புகளுக்கும் குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவி மானியங்கள் அளித்தல்;]

---

[1] சட்டப்பணிகள் அதிகாரஅமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 4(i) ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(ஓ) இந்திய வழக்குரைஞர் மன்றத்தைக் கலந்தாய்வு செய்து, சட்டக் கல்விக்கான தனித்துறை பயிற்சிச் செயல்முறைத் திட்டங்களை வகுத்தல், மற்றும் பல்கலைக்கழகங்களிலும், சட்டக்கல்லூரிகளிலும் பிற நிறுவனங்களிலும் சட்டப்பணிகளுக்கான தனித்துறை பயிற்சியகங்கள் நிறுவப்படுதல், செயற்படுதல் ஆகியவற்றை வழிநடத்துதல், மேற்பார்வையிடுதல் இவற்றை ஊக்குவித்தல் ;

(ஔ) மக்களிடையே சட்ட அறிவையும், சட்ட விழிப்புணர்வையும் பரப்புவதற்கும், குறிப்பாக, சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குச் சமுதாய நலச் சட்டங்களினாலும், பிற செய்சட்டங்களினாலும் நிருவாகச் செயல்முறைகளினாலும் நடவடிக்கைகளினாலும் உறுதி செய்யப்பட்டுள்ள உரிமைகள், நலப்பயன்கள், மதிப்புரிமைகள் பற்றி அறிவுறுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல் ;

(க) அடிமட்டத்தில், குறிப்பாக, பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், பெண்கள் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புறத் தொழிலாளர் களிடையே செயற்படும் தம்விருப்பான சமுதாய நல நிறுவனங்களின் ஆதரவைப் பெறுவதற்குச் சிறப்பு நடவடிக்கைகளை எடுத்தல்;

(ங) [1][மாநில அதிகார அமைப்புகள், மாவட்ட அதிகார அமைப்புகள், உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழுக்கள், உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுக்கள், வட்டாரச் சட்டப்பணிகள் குழுக்கள் மற்றும் தம் விருப்பான சமுதாயப் பணி நிறுவனங்கள்], பிற சட்டப்பணிகள் அமைவனங்கள் ஆகியவற்றின் செயற்பணிகளை ஒருங்கிணைத் தலும் கண்காணித்துத் தெரிவித்தலும், மற்றும் சட்டப்பணிச் செயல் முறைகளை முறையாகச் செயற்படுத்துவதற்கான பொதுவான பணிப்புரைகளை வழங்குதல்.

5. மைய அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி தனது செயற் பணிகளை நிறைவேற்றுகையில், உரிய இடங்களில் எளியவர்களுக்கான சட்டப் பணியினை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள அரசாங்க மற்றும் அரசாங்கச் சார்பற்ற பிற முகவாண்மைகளுடனும், பல்கலைக்கழகங்களுடனும், மற்றவர் களுடனும் ஒருங்கிணைந்து செயலுறுதல் வேண்டும்.

பிற முகவாண்மைகளுடன் மைய அதிகார அமைப்பு ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.

## அத்தியாயம் III

## மாநிலச் சட்டப்பணிகள் அதிகார அமைப்பு

[2][6. (1) ஒவ்வொரு மாநில அரசாங்கமும், இந்தச் சட்டத்தின்படி ஒரு மாநில அதிகாரஅமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ள அல்லது குறித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், செயற்பணிகளைப் புரிவதற்கும், அந்த மாநிலத்திற்காக, சட்டப்பணிகள் அதிகாரஅமைப்பு எனப்படும் ஒரு குழுமத்தை அமைத்தல் வேண்டும்.

மாநிலச் சட்டப் பணிகள் அதிகார அமைப்பை அமைத்தல்.

(2) ஒரு மாநில அதிகாரஅமைப்பானது, பின்வருபவர்களைக் கொண்டதாக இருக்கும் :

(அ) உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, அவர் தலைமைப் புரவலராக இருப்பார்;

(ஆ) உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து ஆளுநரால் நியமனம் செய்யப்பட வேண்டிய உயர்நீதிமன்றப் பணியிலிருக்கும் அல்லது ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர், அவர் செயற்குழுத் தலைவராக இருப்பார் ; மற்றும்

(இ) மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் பட்டறிவையும் தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளவர்களும் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியைக் கலந்தாய்வு செய்து அந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட வேண்டியவர்களுமான அத்தகைய எண்ணிக்கையில் பிற உறுப்பினர்கள்.

---

1 சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994) இன் பிரிவு 4ஆல் ''மாநில மற்றும் மாவட்ட அதிகாரஅமைப்புகள் மற்றும் தம்விருப்பமான பிற சமூக நிறுவனம்'' என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

2 சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 5ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(3) மாநில அரசாங்கமானது, உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து, மாநில உயர்மட்ட நீதித்துறைப் பணியைச் சார்ந்தவரும் ஒரு மாவட்ட நீதிபதியின் படிநிலைக்குக் குறையாதவருமான ஒரு நபரை, மாநில அதிகாரஅமைப்பின் செயற்குழுத் தலைவரின் கீழ், அந்த அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் அல்லது அந்த அதிகாரஅமைப்பின் செயற்குழுத் தலைவரால் குறித்தளிக்கப்படலாகும் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் கடமைகளைப் புரிவதற்கும், மாநில அதிகாரஅமைப்பின் உறுப்பினர்-செயலராக அமர்த்தலாம் :

வரம்புரையாக : மாநில சட்ட உதவி மற்றும் ஆறிவுரைக் குழுவின் செயலாளராகப் பணியாற்றிவரும் நபர் ஒருவர், மாநில அதிகாரஅமைப்பு அமைக்கப்படும் தேதியை அடுத்து முன்பு, இந்த உட்பிரிவின்படி அந்த மாநில அதிகாரஅமைப்பின் உறுப்பினர்-செயலராகப் பணியமர்த்தப்படுவதற்கு அவர் தகுதியுடையவராக இல்லாதபோதிலும், ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு, அந்த அதிகாரஅமைப்பின் உறுப்பினர்-செயலராக அமர்த்தப் படலாம்.

(4) மாநில அதிகாரஅமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்-செயலரின் பதவிக் காலங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக் கட்டுகள், உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகுமாறு இருத்தல் வேண்டும்.

(5) மாநில அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி தன் செயற் பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்காக, உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி யுடன் கலந்தாய்வு செய்து, மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் எண்ணிக்கையில் அலுவலர்களையும் பிற பணிபுரிபவர்களையும் அமர்த்தலாம்.

(6) மாநில அதிகார அமைப்பின் அலுவலர்களும் பிற பணிபுரிபவர்களும், உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் வரையூதியங்களுக்கும் படித் தொகைகளுக்கும் உரிமை கொண்டவராவர் மற்றும் அத்தகைய பிற பணி வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(7) மாநில அதிகாரஅமைப்பின் உறுப்பினர்-செயலர், அலுவலர் கள் மற்றும் பிற பணிபுரிபவர்களுக்கு வழங்கத்தக்க வரையூதியங்கள், படித் தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள் உள்ளடங்களாக, மாநில அதிகார அமைப்பின் நிருவாகச் செலவுகள், மாநிலத் திரள் நிதியத்திலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.

(8) மாநில அதிகார அமைப்பின் ஆணைகள் மற்றும் முடிபுகள் அனைத்தும், மாநில அதிகாரஅமைப்பின் உறுப்பினர்-செயலரால் அல்லது மாநில அதிகார அமைப்பின் செயற்குழுத் தலைவரால் உரியவாறு அதிகார மளிக்கப்பெற்ற பிற அலுவலர் எவராலும் உறுதிச் சான்றிடப்படுதல் வேண்டும்.

(9) மாநில அதிகாரஅமைப்பின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அந்த மாநில அதிகாரஅமைப்பில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது அதன் அமைப்பதில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தின் பேரில் மட்டுமே செல்லாநிலையதாகாது.]

**மாநில அதிகார அமைப்பின் செயற்பணிகள்.**

7. (1) மைய அதிகார அமைப்பின் கொள்கைகளையும், பணிப்புரைகளையும் செல்திறப்படுத்துவது மாநில அதிகார அமைப்பின் கடமையாகும்.

(2) உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்டுள்ள செயற்பணிகளின் பொதுத் தன்மைக்குக் குந்தகமின்றி, மாநிலஅதிகார அமைப்பானது, பின்வரும் செயற் பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் புரிந்துவரும் ; அவையாவன :—

(அ) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்டுள்ள அடிப்படை விதியின் படி தகுதியுடையவராயிருக்கிறவருக்குச் சட்டப் பணியளித்தல் ;

(ஆ) [1][உயர்நீதிமன்ற வழக்குகளுக்கான மக்கள் நீதிமன்றங்கள் உள்ளடங்களாக] மக்கள் நீதிமன்றங்களை நடத்துதல் ;

(இ) தடுப்பு முறையிலான மற்றும் உத்திமுறையிலான சட்ட உதவிச் செயல்முறைத் திட்டங்களை மேற்கொள்ளுதல் ; மற்றும்

---

1. சட்டப்பணிகள் அதிகாரஅமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 6 ஆல் "மக்கள் நீதிமன்றங்கள்" என்ற சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

(ஈ) [1][மைய அதிகார அமைப்பினைக்] கலந்தாய்வு செய்து மாநில அதிகார அமைப்பு, ஒழுங்குறுத்தும் விதிகள் மூலம் தீர்மானிக்கும் பிற செயற் பணிகளைப் புரிதல்.

[2][8. மாநில அதிகாரஅமைப்பானது, தன் செயற்பணிகளை ஆற்றுகையில் எளியவர்களுக்கான சட்டப்பணிகளை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள பிற அரசாங்க முகவாண்மைகளுடன், அரசாங்கச் சார்பற்ற தம்விருப்பான சமுதாயப் பணி நிறுவனங்களுடன், பல்கலைக்கழகங்களுடன் மற்றும் பிற குழுமங்களுடன் ஒருங்கிணைந்து உரியவாறு செயலுறுதல் வேண்டும். மற்றும் மைய அதிகாரஅமைப்பு, எழுத்து மூலம் அதற்கு அளிக்கலாகும் பணிப்புரைகளால் வழிநடத்தப்படுதலும் வேண்டும்.]

மாநில அதிகார அமைப்பு பிற முகவாண்மைகள் முதலானவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்படுத்தலும் மைய அதிகார அமைப்பினால் அளிக்கப்படும் பணிப்புரைகளுக்கு உட்பட்டிருத்தலும்.

உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழு.

8 அ. (1) மாநில அதிகாரஅமைப்பானது, மாநில அதிகார அமைப்பால் வகுக்கப்படும் ஒழுங்குறுத்தும் விதிகளால் தீர்மானிக்கப்படலாகும் அதிகாரங்களைச் செலுத்துவதும், செயற்பணிகளை ஆற்றுவதுமான நோக்கத்திற்காக, உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழு எனப்படும் ஒரு குழுவை ஒவ்வோர் உயர்நீதிமன்றத்திற்கும் அமைத்தல் வேண்டும்.

(2) அந்தக் குழுவானது, பின்வருபவர்களைக் கொண்டதாக இருக்கும்—

(அ) உயர்நீதிமன்றத்தின் அமர்வு நீதிபதி ஒருவர், அவர் தலைவராக இருப்பார் ; மற்றும்

(ஆ) மாநில அதிகாரஅமைப்பினால் வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும் விதிகளால் தீர்மானிக்கப்படலாகும் பட்டறிவையும் தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளவர்களும் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியால் நியமனம் செய்யப்பட வேண்டியவர்களுமான, அத்தகைய எண்ணிக்கையில் பிற உறுப்பினர்கள்.

(3) உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் பட்டறிவையும் தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ள செயலாளர் ஒருவரைக் குழுவிற்கு அமர்த்துவார்.

(4) குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளரின் பதவிக் காலம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக்கட்டுகள், மாநில அதிகார அமைப்பால் வகுக்கப்படும் ஒழுங்குறுத்தும் விதிகளால் தீர்மானிக்கப்படலாகுமாறு, இருத்தல் வேண்டும்.

(5) அந்தக் குழுவானது, தன் செயற்பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்காக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் எண்ணிக்கையில் அலுவலர்களையும் பிற பணிபுரிபவர்களையும் அமர்த்தலாம்.

(6) அந்தக் குழுவின் அலுவலர்களும் பிற பணிபுரிபவர்களும் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து, மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் வரையூதியத்திற்கும் படித்தொகைகளுக்கும் உரிமை கொண்டவராவர் மற்றும் அத்தகைய பிற பணிவரைக்கட்டுகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

மாவட்டச் சட்டப்பணிகள் அதிகார அமைப்பு.

9. (1) மாநில அரசாங்கமானது, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இந்தச் சட்டத்தின்படி மாவட்ட அதிகாரஅமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ள அல்லது குறித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், செயற்பணிகளைப் புரிவதற்கும் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மாவட்டச் சட்டப் பணிகள் அதிகார அமைப்பு எனப்படும் ஒரு குழுமத்தை அமைத்தல் வேண்டும்.

---

[1] சட்டப் பணிகள் அதிகாரஅமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 7 ஆல் ''மைய அரசாங்கம்'' என்ற சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

[2] சட்டப் பணிகள் அதிகாரஅமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 7 ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

(2) மாவட்ட அதிகார அமைப்பு ஒன்று, பின்வருபவர்களைக் கொண்டதாக இருக்கும்.—

(அ) மாவட்ட நீதிபதி, அவர் அதன் தலைவராக இருப்பார் ; மற்றும்

(ஆ) அந்த மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் பட்டறிவையும் தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளவர்களும், உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து, அந்த அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட வேண்டியவர்களுமான அத்தகைய எண்ணிக்கையில் பிற உறுப்பினர்கள்.

(3) மாநில அதிகார அமைப்பானது, மாவட்ட அதிகாரஅமைப்பின் தலைவரால் குறித்தளிக்கப்படலாகும் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் கடமைகளைப் புரிவதற்கும், மாநில நீதித் துறையைச் சார்ந்தவராயிருந்து, மாவட்ட நீதித்துறை பணியிடத்தில் பணியிலுள்ள கீழ்நிலை நீதிபதியின் அல்லது உரிமையியல் நீதிபதியின் படிநிலைக்கு குறையாத படிநிலையிலுள்ள ஒருவரை, மாவட்ட அதிகாரஅமைப்பின் தலைவருடன் கலந்தாய்வு செய்து, அந்த குழுவின் தலைவரின் கீழ், மாவட்ட அதிகார அமைப்பின் செயலாளராக அமர்த்துதல் வேண்டும்.

(4) மாவட்ட அதிகாரஅமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளரின் பதவிக் காலங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக்கட்டுகள் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மாநில அதிகார அமைப்பினால் வகுக்கப்படலாகும் ஒழுங்குறுத்தும் விதிகளால் தீர்மானிக்கப்படலாகுமாறு இருத்தல் வேண்டும்.

(5) மாவட்ட அதிகாரஅமைப்பானது, தன் செயற்பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்காக, உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மாநில அரசாங்கத்தினால் வகுத்துரைக்கப்படலாகும் எண்ணிக்கையில் அலுவலர்களையும் பிற பணிபுரிபவர்களையும் அமர்த்தலாம்.

(6) மாவட்ட அதிகாரஅமைப்பின் அலுவலர்களும் பிற பணிபுரிபவர்களும், உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து, மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் வரையூதியத்திற்கும் படித்தொகைகளுக்கும் உரிமை கொண்டவராவர், மற்றும் அத்தகைய பிற பணி வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(7) மாவட்ட அதிகார அமைப்பின் செயலாளருக்கும், அலுவலர்களுக்கும் பிற பணிபுரிபவர்களுக்கும் வழங்கத்தக்க வரையூதியங்கள், படித்தொகைகள் மற்றும் ஓய்வூதியங்கள் உள்ளடங்கலாக மாவட்ட அதிகார அமைப்பின் நிருவாகச் செலவுகள், மாநிலத் திரள் நிதியத்திலிருந்து செலவிடப்படுத்தல் வேண்டும்.

(8) மாவட்ட அதிகாரஅமைப்பின் ஆணைகள் மற்றும் முடிவுகள் அனைத்தும், மாவட்ட அதிகாரஅமைப்பின் செயலாளரால் அல்லது அந்த அதிகார அமைப்பினால் உரியவாறு அதிகாரமளிக்கப்பெற்ற பிற அலுவலர் எவராலும் உறுதிச் சான்றிடப்படுதல் வேண்டும்.

(9) மாவட்ட அதிகார அமைப்பின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அந்த மாவட்ட அதிகாரஅமைப்பில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தின்பேரில் மட்டுமே செல்லாநிலையதாகாது.

**மாவட்ட அதிகார அமைப்பின் செயற்பணிகள்.**

10. (1) மாநில அதிகாரஅமைப்பின் செயற்பணிகளில் மாநில அதிகார அமைப்பினால் அவ்வப்போது தனக்கு ஒப்படைவு செய்யப்படலாகும் செயற்பணிகளை மாவட்டத்தில் புரிவது ஒவ்வொரு மாவட்ட அதிகாரஅமைப்பின் கடமையாகும்.

(2) உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்டுள்ள செயற்பணிகளின் பொதுத் தன்மைக்குக் குந்தகமின்றி, மாவட்ட அதிகாரஅமைப்பு பின்வரும் செயற்பணிகள் அனைத்தையும் புரிந்துவரலாம் ; அவையாவன :—

[1][(அ) மாவட்டத்திலுள்ள வட்டார சட்டப் பணிகள் குழுவின் மற்றும் பிற சட்டப் பணிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்;]

(ஆ) அந்த மாவட்டத்திற்குள் மக்கள் நீதிமன்றங்களை அமைத்தல்; மற்றும்

---

[1] சட்டப் பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 3ஆல் மாற்றியமைக்கப்பட்டது.

(இ) மாநில அதிகார அமைப்பு, ஒழுங்குறுத்தும் விதிகள் [1][ * * * ] நிர்ணயிக்கலாகும் பிற செயற்பணிகளைப் புரிதல்.

மாவட்ட அதிகார அமைப்பானது பிற முகவாண்மைகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுதலும் மைய அதிகார அமைப்பு முதலானவற்றினால் அளிக்கப்படும் பணிப்புரைகளுக்கு உட்பட்டிருத்தலும்.

11. மாவட்ட அதிகார அமைப்பு, இந்தச் சட்டத்தின்படியான தனது செயற்பணிகளை ஆற்றுகையில், உரிய இடங்களில், எளியவர்களுக்கான சட்டப்பணிகளை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ள பிற அரசாங்க மற்றும் அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களுடனும், பல்கலைக்கழகங்களுடனும், மற்றவர்களுடனும் ஒருங்கிணைந்து செயலுறுதல் வேண்டும்; மற்றும் மைய அதிகார அமைப்பு அல்லது மாநில அதிகார அமைப்பு எழுத்து வடிவில் அதற்கு அளிக்கலாகும் பணிப்புரைகளால் வழிநடத்தப்படுதலும் வேண்டும்.

வட்டாரச் சட்டப் பணிகள் குழு.

[2][11 அ. (1) மாநில அதிகார அமைப்பானது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அல்லது மண்டலத்திற்கும் அல்லது வட்டாரங்களின் அல்லது மண்டலங்களின் தொகுதிகளுக்கும் வட்டாரச் சட்டப் பணிகள் குழு எனப்படும் குழு ஒன்றினை அமைக்கலாம்.

(2) அந்தக் குழுவானது, பின்வருபவர்களைக் கொண்டதாக இருக்கும்:—

(அ) குழுவின் அதிகார வரம்புக்குள் செயற்படும் முதுநிலை உரிமையியல் நீதிபதி, அவர் பதவிவழித் தலைவராக இருப்பார்; மற்றும்

(ஆ) மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் பட்டறிவையும் தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளவர்களும் அந்த அரசாங்கத்தால் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து, நியமிக்கப்பட வேண்டியவர்களுமான அத்தகைய எண்ணிக்கையில் பிற உறுப்பினர்கள்.

(3) அந்தக் குழு, தன் செயற்பணிகளைத் திறம்பட ஆற்றும் நோக்கத்திற்காக, உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் எண்ணிக்கையில் அலுவலர்களையும் பிற பணிபுரிபவர்களையும் அமர்த்தலாம்.

(4) அந்தக் குழுவின் அலுவலர்களும், பிற பணிபுரிபவர்களும், உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாம் வரையூதியம் மற்றும் படித்தொகைகளுக்கு உரிமை கொண்டவராவர்; மற்றும் அத்தகைய பிற வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(5) குழுவின் நிருவாகச் செலவுகள், மாவட்ட அதிகாரஅமைப்பினால் மாவட்டச் சட்ட உதவி நிதியத்திலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.

வட்டாரச் சட்டப் பணிகள் குழுவின் செயற்பணிகள்.

11 ஆ. வட்டாரச் சட்டப்பணிகள் குழுவானது, பின்வரும் செயற்பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் புரியலாம்; அவையாவன :—

(அ) வட்டாரத்தில் சட்டப்பணிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்;

(ஆ) வட்டாரத்திற்குள் மக்கள் நீதிமன்றங்களை அமைத்தல்; மற்றும்

(இ) மாவட்ட அதிகாரஅமைப்பு அதற்குக் குறித்தளிக்கலாகும் பிற செயற்பணிகளைப் புரிதல்.]

1. சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 8(ii) ஆல் ''மாநில அரசாங்கத்துடன் கலந்தாய்வு செய்து, என்ற சொற்கள் விட்டுவிடப்பட்டன.

2. மேற்படிச் சட்டத்தின் பிரிவு 9 ஆல் புகுத்தப்பட்டது.

## அத்தியாயம் IV

### சட்டப் பணிகளைப் பெற உரிமை கொண்டிருத்தல்

சட்டப்பணி அளிப்பதற்கான அடிப்படை விதி.

12. இந்தச் சட்டத்தின்படி ஒரு வழக்கினைத் தொடர அல்லது அதனை எதிர்த்து வாதிட வேண்டியுள்ள ஒவ்வொருவரும், அவர்—

(அ) ஒரு பட்டியல் சாதியின் அல்லது பட்டியல் பழங்குடியின் ஓர் உறுப்பினராக இருப்பாராயின்,

(ஆ) அரசமைப்பின் உறுப்பு 23இல் சுட்டப்பட்டுள்ள மனித இழிதொழில் வணிகத்திற்கு அல்லது, பேகார் முறைக்குப் பலியாகிய ஒருவராக இருப்பாராயின்,

(இ) ஒரு பெண்ணாக அல்லது குழந்தையாக இருப்பாராயின், அல்லது

(ஈ) மனநோயுற்றவராக அல்லது பிறவாறு ஊனமுற்றவராக இருப்பாராயின், அல்லது

(உ) மாபெரும் இடர், இன வன்முறை, சாதிக்கொடுமை, வெள்ளம், வறட்சி, நிலநடுக்கம் அல்லது தொழில் இடர் போன்ற அநியாயமான அவலச் சூழ்நிலைகளில் சிக்கியுள்ளவராக இருப்பாராயின், அல்லது

(ஊ) ஒரு தொழிற்சாலைத் தொழிலாளியாக இருப்பாராயின், அல்லது

(எ) விபச்சாரத் (தடுப்புச்) சட்டம், 1956 (104/1956) இன் பிரிவு 2இன் கூறு (ஓ)வின் பொருளின்படி ஒரு காப்பகத்தில் அல்லது இளையோர் நீதிச்சட்டம், 1986 (63/1986)இன் பிரிவு 2இன் கூறு (ஓ)வின் பொருளின்படி ஒரு இளையோர் இல்லத்தில் அல்லது மனநலச் சட்டம் 1987 (14/1987)இன் பிரிவு 2இன் கூறு (எ)இன் பொருளின்படி உளவியல் மருத்துவமனை ஒன்றில் அல்லது தனியார் உளவியல் மருத்துவமனை பாதுகாவலில் இருத்தல் உள்ளடங்கலாக பாதுகாவலில்] இருப்பாராயின், அல்லது

[1][(ஏ) உச்சநீதிமன்றம் அல்லாத பிற நீதிமன்றத்தின் முன்பு வழக்கு இருக்குமாயின், ஒன்பதாயிரம் ரூபாய்க்குக் குறைவான அல்லது மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் பிற உயர் தொகைக்குக் குறைவான தொகையை அல்லது உச்சநீதிமன்றத்தின் முன்பு வழக்கு இருக்குமாயின், பன்னிரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைவான அல்லது மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகும் பிற உயர் தொகைக்குக் குறைவான தொகையை ஆண்டு வருமானமாகப் பெறுபவராக இருப்பாராயின்]

இந்தச் சட்டத்தின்படியான சட்டப் பணிகளைப் பெற உரிமை கொண்டவர் ஆவார்.

சட்டப்பணிகளைப்பெற உரிமை கொண்டிருத்தல்.

13. (1) பிரிவு 12இல் குறித்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை விதி அனைத்தின் அல்லது அவற்றுள் ஏதொன்றின்படி தகுதியுடையவராயிருக்கிறவர்கள், குற்ற வழக்குத் தொடர அல்லது எதிர்வாதிட ஒரு வழக்கினை முதல் நிலையிலேயே கொண்டிருக்கின்றனர் என்று தொடர்புடைய அதிகாரஅமைப்பு தெளிவுறக் காணுமாயின், சட்டப் பணிகளைப் பெறுவதற்கு உரிமைக் கொண்டவர்கள் ஆவர்.

(2) ஒருவர் தமது வருமானம் பற்றி அளித்த ஓர் ஆணையுறுதி ஆவணத்தை நம்பாமலிருப்பதற்குத் தொடர்புடைய அதிகாரஅமைப்பு காரணம் கொண்டிருந்தாலன்றி, அத்தகைய ஆணையுறுதி ஆவணம், இந்தச் சட்டத்தின்படியான சட்டப் பணிகளைப் பெறுவதற்கான உரிமைக்கு அவரைத் தகுதியுடையவராக்குவதற்குப் போதுமானது எனக் கருதப்படலாம்.

---

1. சட்டப் பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 10 ஆல் முந்திய கூறு (ஏ)வுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

## அத்தியாயம் V

### நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை

14. மைய அரசாங்கம், நாடாளுமன்றத்தினால் இதற்கென சட்ட வழி உரிய ஒதுக்கீடு செய்த பின்பு, மானியங்கள் என்னும் வகையில் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காகத் தான் தக்கதெனக் கருதலாகும் பணத் தொகையினை மைய அதிகாரஅமைப்பிற்கு வழங்குதல் வேண்டும். **அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியங்கள்.**

15. (1) மைய அதிகாரஅமைப்பு, தேசியச் சட்ட உதவி நிதியம் என்று வழங்கப்பெறும் ஒரு நிதியத்தை நிறுவும், மற்றும் அதில்,— **தேசியச் சட்ட உதவி நிதியம்.**

(அ) பிரிவு 14இன்படி மைய அரசாங்கத்தினால் மானியங்களாக அளிக்கப்படும் பணத் தொகைகள் அனைத்தும்,

(ஆ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, பிறர் எவராலும் மைய அதிகார அமைப்பிற்கு வழங்கப்படலாகும் மானியங்கள் அல்லது நன்கொடைகள் எவையும்,

(இ) நீதிமன்றம் ஏதொன்றின் ஆணைகளின்படி அல்லது பிற வழி வகை எதிலிருந்தும் மைய அதிகாரஅமைப்பினால் பெறப்படும் தொகை எதுவும்

வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) தேசியச் சட்ட உதவி நிதியம்—

(அ) மாநில அதிகாரஅமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் உள்ளடங்கலாக, இந்தச் சட்டத்தின்படி அளிக்கப்படும் சட்டப் பணிகளுக்கான செலவடையினை,

[1][(ஆ) உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழுவினால் வகை செய்யப்படும் சட்டப் பணிகளுக்கான செலவடையினை,

(இ) மைய அதிகாரஅமைப்பினால் ஏற்கப்படுவதற்கு வேண்டுறுத்தப் பட்டுள்ள பிற செலவுகள் எவற்றையும்]

ஏற்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

16. (1) ஒரு மாநில அதிகாரஅமைப்பு, மாநிலச் சட்ட உதவி நிதியம் என்று வழங்கப்பெறும் ஒரு நிதியத்தை நிறுவும்; மற்றும் அதில்— **மாநிலச் சட்ட உதவி நிதியம்.**

(அ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, மைய அதிகாரஅமைப்பினால் அதற்கு வழங்கப்படும் பணத்தொகைகள் அனைத்தும் அல்லது வழங்கப்படும் மானியங்கள் எவையும்,

[2][(ஆ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மாநில அரசாங்கத்தினால் அல்லது நபர் எவராலும் மாநில அதிகாரஅமைப்பிற்கு வழங்கப் படலாகும் மானியங்கள் அல்லது நன்கொடைகள் எவையும்,

(இ) நீதிமன்றம் ஏதொன்றின் ஆணைகளின்படி அல்லது பிற வழிவகை எதிலிருந்தும் மாநில அதிகாரஅமைப்பினால் பெறப்படும் பிற தொகை எதுவும்]

வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு மாநிலச் சட்ட உதவி நிதியமானது,—

(அ) பிரிவு 7 இல் சுட்டப்பட்டுள்ள செயற்பணிகளுக்கான செலவடையினை,

[1][(ஆ) உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழுக்களால் வகை செய்யப்படும் சட்டப் பணிகளுக்கான செலவடையினை,

(இ) மாநில அதிகாரஅமைப்பினால் ஏற்கப்படுவதற்கு வேண்டுறுத்தப் பட்டுள்ள பிற செலவுகள் எவற்றையும்]

ஏற்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

---

1. சட்டப் பணிகள் அதிகாரஅமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994) இன் பிரிவு 10 ஆல் மூலச் சட்டத்தின் கூறு (ஆ)வுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
2. மேற்படிச் சட்டத்தின் பிரிவு 12 ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

**மாவட்டச் சட்ட உதவி நிதியம்.**

17. (1) ஒவ்வொரு மாவட்ட அதிகார அமைப்பும், மாவட்டச் சட்ட உதவி நிதியம் என்று வழங்கப்பெறும் ஒரு நிதியத்தை நிறுவும்; அதில்,—

(அ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, மாவட்ட அதிகார அமைப்புக்கு மாநில அதிகார அமைப்பினால் வழங்கப்படும் பணத் தொகை அனைத்தும் அல்லது வழங்கப்படும் மானியங்கள் எவையும்,

[1][(ஆ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, நபர் எவராலும் மாநில அதிகார அமைப்பின் முன்ஒப்பேற்புடன் மாவட்ட அதிகார அமைப்பிற்கு வழங்கப்படலாகும் மானியங்கள் அல்லது நன்கொடைகள் எவையும்,]

(இ) நீதிமன்றம் ஏதொன்றின் ஆணையின்படி அல்லது பிற வழிவகை எதிலிருந்தும் மாவட்ட அதிகார அமைப்பினால் பெறப்படும் பிற தொகை ஏதுவும்

வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு மாவட்டச் சட்ட உதவி நிதியமானது,—

(அ) பிரிவு 10இல் [1][மற்றும் ][1] 1 (அ) இல்] கட்டப்பட்டுள்ள செயற்பணிகளுக்கான செலவடையினை,

(ஆ) மாவட்ட அதிகார அமைப்பினால் ஏற்கப்படுவதற்கு வேண்டுறுத்தப்பட்டுள்ள பிற செலவுகள் எவற்றையும்

ஏற்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

**கணக்குகளும் தணிக்கையும்.**

18. (1) மைய அதிகாரஅமைப்பு, மாநில அதிகாரஅமைப்பு, அல்லது நேர்வுக்கேற்ப, மாவட்ட அதிகாரஅமைப்பு (இந்தப் பிரிவில் இதற்குப் பின்பு அதிகாரஅமைப்பு என்று சுட்டப்படுவது) மைய அரசாங்கத்தினால் இந்திய கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையருடன் கலந்தாய்வு செய்து வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும் முறையிலும், முறையான கணக்குகளையும் தொடர்புடைய பிற பதிவேடுகளையும் வைத்து வருதல் வேண்டும்; மற்றும் வரவு–செலவுக் கணக்கு, ஐந்தொகைக் குறிப்பு உள்ளடங்கலாக, ஓர் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கையினைத் தயாரித்தலும் வேண்டும்.

(2) அதிகாரஅமைப்புகளின் கணக்குகள், இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையாளரால் ,அவரால் குறித்துரைக்கப்படலாகும் கால இடைவெளிகளில் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தணிக்கை தொடர்பாக ஏற்படும் செலவு எதுவும், தொடர்புடைய அதிகாரஅமைப்பினால் இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையருக்கு வழங்கத்தக்கதாகும்.

(3) இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையரும், இந்தச் சட்டத்தின்படி ஓர் அதிகாரஅமைப்பின் கணக்குகளின் தணிக்கை தொடர்பாக அவரால் அமர்த்தப்படும் பிறநபர் எவரும், அரசாங்கக் கணக்குகளை ஆய்வு செய்வது தொடர்பாக இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையர் பெற்றுள்ள அதே உரிமைகளையும், மதிப்புரிமைகளையும், அதிகாரத்தையும், அத்தகைய தணிக்கை தொடர்பாக உடையவராவார்; மற்றும் குறிப்பாக, கணக்குப் புத்தகங்களையும், கணக்குகளையும், தொடர்புடைய செலவுச்சீட்டுகளையும், பிற ஆவணங்களையும், தாள்களையும் முன்னிடுமாறு கோருவதற்கும், இந்தச் சட்டத்தின்படியான அதிகாரஅமைப்பின் அலுவலகம் எதனையும் ஆய்வு செய்வதற்கும் அதிகாரம் உடையவராவார்.

(4) இந்தியக் கணக்காய்வர்—தலைமைத் தணிக்கையரால் அல்லது இதற்கென அவரால் அமர்த்தப்படும் பிற நபர் எவராலும் சான்றளிக்கப்பட்டவாறான அதிகார அமைப்பின் கணக்குகள் அதன் மீதான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து, ஆண்டுதோறும் அதிகாரஅமைப்புகளினால் மைய அரசாங்கத்திற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மாநில அரசாங்கத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

[1][(5) மைய அரசாங்கம், உட்பிரிவு (4) இன்படி தன்னால் பெறப்படும் கணக்குகளையும், தணிக்கை அறிக்கையினையும் அவை பெறப்பட்ட பின்பு கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுமாறு செய்தல் வேண்டும்.

(6) மாநில அரசாங்கம் உட்பிரிவு (4) இன்படி தன்னால் பெறப்படும் கணக்குகளும் தணிக்கை அறிக்கையும் அவை பெறப்பட்ட பின்பு கூடியவிரைவில், மாநில சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுமாறு செய்தல் வேண்டும்.]

1. சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 இன் (59/1994) பிரிவு 13 ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

2. மேற்படி சட்டத்தின் பிரிவு 13ஆல் மாற்றாக அமைக்கப்பட்டது.

## அத்தியாயம் VI

### மக்கள் நீதிமன்றங்கள்

[1][19. (1) மாநில அதிகார அமைப்பு அல்லது மாவட்ட அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் அல்லது உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழு அல்லது உயர்நீதி மன்ற சட்டப்பணிகள் குழு அல்லது, நேர்வுக்கேற்ப, வட்டாரச் சட்டப்பணிகள் குழு ஒவ்வொன்றும், தான் தக்கதெனக் கருதும் கால இடைவெளிகளிலும் ,இடங்களிலும் மற்றும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துவதற்காக அத்தகைய பகுதிகளுக்கு மக்கள் நீதிமன்றங்களை அமைக்கலாம். மக்கள் நீதி மன்றத்தை அமைத்தல்.

(2) ஒரு பகுதிக்காக அமைக்கப்பட்ட மக்கள் நீதிமன்றம் ஒவ்வொன்றும் அத்தகைய மக்கள் நீதிமன்றத்தை அமைத்து நடத்தும் மாநில அதிகார அமைப்பால் அல்லது மாவட்ட அதிகார அமைப்பால் அல்லது உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழுவால் அல்லது ஒவ்வோர் உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுவால் அல்லது நேர்வுக்கேற்ப, வட்டாரச் சட்டப்பணிகள் குழுவால் குறித்துரைக்கப்படலாகும் எண்ணிக்கையில் அப்பகுதியில்—

(அ) பணியிலிருக்கும் அல்லது ஒய்வு பெற்ற நீதித்துறை அதிகாரிகளையும்,

(ஆ) பிற நபர்களையும்

கொண்டதாக இருக்கும்.

(3) உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழுவால் அமைக்கப்பட்ட மக்கள் நீதிமன்றத்துக்காக, உட்பிரிவு (2)இன்கூறு (ஆ)இல் சுட்டப்பட்ட பிற நபர்களுக்கான பட்டறிவும் தகுதிப்பாடுகளும், இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து, மைய அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகுமாறு இருத்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (3)இல் சுட்டப்பட்டவை அல்லாத பிற மக்கள் நீதிமன்றங்களுக்காக, உட்பிரிவு (2)இன் கூறு (ஆ)இல் சுட்டப்பட்ட பிற நபர்களுக்கான பட்டறிவும் தகுதிப்பாடுகளும், உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து, மாநில அரசாங்கத்தால் வகுத்துரைக்கப்படலாகுமாறு இருத்தல் வேண்டும்.

(5) மக்கள் நீதிமன்றம் ஒன்று, எந்த நீதிமன்றத்துக்காக மக்கள் நீதிமன்றம் அமைக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின்—

(i) முன்பு முடிவுறா நிலையிலுள்ள வழக்கு எதையும், அல்லது

(ii) அதிகாரவரம்பிற்குள் வருவதும் அதன் முன்பு கொண்டு வரப் பட்டிராததுமான பொருட்பாடு எதையும்

பொறுத்து தீர்வு காண்பதற்கும் ஒரு பூசலிலுள்ள தரப்பினர்களுக்கிடையே சமரசம் அல்லது தீர்வு ஏற்படுவதற்கும் அதிகார வரம்புடையதாகும் :

வரம்புரையாக : மக்கள் நீதிமன்றம், சட்டம் எதன்படியும் இணக்கமாகத் தீர்த்துக் கொள்ளத்தக்கதல்லாத குற்றச்செயல் ஒன்று தொடர்பான வழக்கு அல்லது பொருட்பாடு எதனையும் பொறுத்து அதிகாரவரம்பு எதுவும் உடைய தாகாது.

20. (1) பிரிவு 19இன் உட்பிரிவு (5)இன் கூறு (i)இல் சுட்டப்பட்டுள்ள வழக்கு ஒன்றில்,— மக்கள் நீதிமன்றங்களால் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படுதல்.

(i) தீர்வுக்காக அந்த வழக்கை மக்கள் நீதிமன்றத்துக்கு குறித்து அனுப்புவதற்கு,—

(அ) அதன் தரப்பினர்கள் உடன்படுமிடத்து, அல்லது

(ஆ) அதன் தரப்பினர்களில் ஒருவர், நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் ஒன்று செய்கிறவிடத்து

மற்றும் அத்தகைய நீதிமன்றம், அத்தகைய தீர்வுக்கு வாய்ப்புகள் இருக்கிறதென்று முதல் நோக்கில் தெளிவுறக்காணுமாயின், அல்லது

(ii) அந்தப் பொருட்பாடு, மக்கள் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு பொருத்தமான ஒன்று என்று அந்த நீதிமன்றம் தெளிவுறக் காணுமாயின்

அந்த நீதிமன்றம் அந்த வழக்கை மக்கள் நீதிமன்றத்துக்குக் குறித்தனுப்புதல் வேண்டும் :

---

1. சட்டப்பணிகள் அதிகார அமைபபுகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் சட்டத்தின் பிரிவு 14ஆல் புகுத்தப்பட்டது.

வரம்புரையாக : கூறு (i)இன் உட்கூறு (ஆ)இன்படி அல்லது கூறு (ii)இன்படி அத்தகைய நீதிமன்றத்தால் வழக்கு எதுவும் விசாரிக்கப்படுவதற்கு தரப்பினர்களுக்கு தகுமானதொரு வாய்ப்பு நல்கிய பின்பு தவிர, மக்கள் நீதிமன்றத்துக்குக் குறித்தனுப்பப்படுதலாகாது.

(2) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பிரிவு 19இன் உட்பிரிவு (1)இன்படி மக்கள் நீதிமன்றத்தை அமைத்து நடத்தும் அதிகாரஅமைப்பு அல்லது குழு, பிரிவு 19இன் உட்பிரிவு (5)இன் கூறு (ii) இல் சுட்டப்பட்ட பொருட்பாடு எதனின் தரப்பினர்களில் எவரேனும் ஒருவரிடமிருந்து, அத்தகைய பொருட்பாடு மக்கள் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவது தேவையானதென்று கருதி விண்ணப்பம் ஒன்றுறப் பெறுவதன் பேரில், அத்தகைய பொருட்பாட்டினை தீர்வுக்காக, மக்கள் நீதிமனறத்துக்குக் குறித்தனுப்பலாம் :

வரம்புரையாக : பொருட்பாடு எதுவும், விசாரிக்கப்படுவதற்கு தகுமானதொரு வாய்ப்பினை மற்ற தரப்பினருக்கு நல்கிய பின்பு தவிர, மக்கள் நீதிமன்றத்துக்குக் குறித்தனுப்பப்படுதலாகாது.

(3) உட்பிரிவு (1)இன்படி வழக்கு எதுவும், மக்கள் நீதிமன்றம் ஒன்றுக்குக் குறித்தனுப்பப்படுகிறவிடத்து அல்லது உட்பிரிவு (2)இன்படி அதற்கு குறித்தனுப்புகை ஒன்று செய்யப்பட்டிருக்கிறவிடத்து, மக்கள் நீதிமன்றமானது, அந்த வழக்கினை அல்லது பொருட்பாட்டினை முடிவு செய்வதற்கும் தரப்பினர்களிடையே சமரசம் அல்லது தீர்வு ஏற்படுத்துவதற்கும் முற்படுதல் வேண்டும்.

(4) மக்கள் நீதிமன்றம் ஒவ்வொன்றும், தன் முன்புள்ள இந்தச் சட்டத்தின்படியான குறித்தனுப்புகை எதனையும் தீர்மானிக்குங்கால் தரப்பினர்களிடையே சமரசம் அல்லது தீர்வு ஏற்படுத்துவதற்கு, கூடிய அளவு விரைவாகச் செயல்படுதல் வேண்டும்; மற்றும் நீதி, நியாயம், நடுநிலை கோடாமை நெறிகளாலும் பிற சட்டமுறை நெறிகளாலும் வழிகாட்டப்படுதல் வேண்டும்.

(5) தரப்பினர்களிடையே சமரசம் அல்லது தீர்வு ஏற்படுத்த முடியவில்லை என்ற காரணத்தின்பேரில், மக்கள் நீதிமன்றத்தால் தீர்வம் எதுவும் செய்யப்படாதவிடத்து, வழக்கின் பதிவுக்கட்டானது, அதனால் எந்த நீதிமன்றத்திடமிருந்து அந்த குறித்தனுப்புகை, உட்பிரிவு (1)இன்படி பெறப்பட்டதோ அந்த நீதிமன்றத்திற்கு சட்டப்படி முடிவு செய்வதற்காகத் திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

(6) உட்பிரிவு (2)இல் சுட்டப்பட்ட பொருட்பாடு ஒன்றில் தரப்பினர்களிடையே சமரசம் அல்லது தீர்வு ஏற்படுத்த முடியவில்லை என்ற காரணத்தின் பேரில், மக்கள் நீதிமன்றத்தால் தீர்வம் எதுவும் செய்யப்படாதவிடத்து, அந்த மக்கள் நீதிமன்றம், நீதிமன்றம் ஒன்றில் தீர்வழிகள் நாடும்படி அந்தத் தரப்பினர்களுக்குத் தேர்வுரை வழங்கலாம்.

(7) வழக்கின் பதிவுக்கட்டானது, உட்பிரிவு (5)இன்படி அந்த நீதிமன்றத்திற்குத் திருப்பியனுப்பப்படுகிறவிடத்து, அத்தகைய நீதிமன்றம் அந்த வழக்கினை, உட்பிரிவு (1)இன்படியான அத்தகைய குறித்தனுப்புகைக்கு முன்பு அது எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலையிலிருந்து நடத்துவதற்கு முற்படுதல் வேண்டும்.

**மக்கள் நீதிமன்றத்தின் தீர்வம்.**

21. [1][(1) மக்கள் நீதிமன்றத்தின் தீர்வம் ஒவ்வொன்றும், ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் அல்லது நேர்வுக்கேற்ப, பிற நீதிமன்றம் எதனின் ஓர் ஆணையாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் ஒரு மக்கள் நீதிமன்றத்தால் பிரிவு 20இன் உட்பிரிவு (1)இன்படி அதற்கு குறித்தனுப்பப்பட்ட வழக்கு ஒன்றில் ஒரு சமரசம் அல்லது தீர்வு ஏற்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய வழக்கில் செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணமானது, நீதிமன்றக் கட்டணங்கள் சட்டம், 1870இன்படி வகைசெய்யப்பட்டுள்ள முறையில் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.]

(2) ஒரு மக்கள் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்வம் ஒவ்வொன்றும், அறுதியானதாகும்; மற்றும் அது தரப்பினர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும் ; மற்றும் அந்தத் தீர்வத்திற்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் மேன்முறையீடு செய்யப்படுதலாகாது.

**மக்கள் நீதிமன்றத்தின் அதிகாரங்கள்.**

22. (1) மக்கள் நீதிமன்றம், இந்தச் சட்டத்தின்படி அறுதித் தீர்வு செய்யும் நோக்கங்களுக்காக, ஓர் உரிமை வழக்கை விசாரணை செய்கையில், பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்து உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908 (5/1908)இன்படி ஓர் உரிமையியல் நீதிமன்றத்திடம் உற்றமைந்துள்ள அதே அதிகாரங்களை உடையது ஆகும் ; அவையாவன :—

---

1. சட்டப் பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 16 ஆல் உட்பிரிவு (1)க்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

(அ) சாட்சிகள் எவருக்கும் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்புதல் மற்றும் அவர்களை வருமாறு கட்டாயப்படுத்துதல் மற்றும் அவர்களை ஆணைமொழியின்பேரில் விசாரணை செய்தல் ;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்தலும் முன்னிலைப்படுத்துதலும் ;

(இ) ஆணையுறுதி ஆவணங்களின்பேரில் சான்றுகளைப் பெறுதல் ;

(ஈ) பொதுப் பதிவணம் அல்லது ஆவணம் அல்லது அத்தகைய பதிவணத்தின் அல்லது ஆவணத்தின்படியினை நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் வேண்டுறுத்திப் பெறுதல் ; மற்றும்

(உ) வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடுகள்.

(2) உட்பிரிவு (1)-இல் அடங்கியுள்ள அதிகாரங்களின பொதுப் பாங்கிற்குக் குந்தகமின்றி, மக்கள் நீதிமன்றம் ஒவ்வொன்றும், தன் முன்புள்ள பூசல் எதனையும் அறுதித் தீர்வு செய்வதற்கான தன்னுடைய விசாரணை முறையினை குறித்துரைப்பதற்குப் போதிய அதிகாரங்களை உடையதாகும்.

(3) ஒரு மக்கள் நீதிமன்றத்தின் முன்பு உள்ள நடவடிக்கைகள் அனைத்தும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 193, 219, 228 ஆகியவற்றின் பொருளின்படி நீதிமுறை நடவடிக்கைகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் மக்கள் நீதிமன்றம் ஒவ்வொன்றும், குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் பிரிவு 195 மற்றும் அத்தியாயம் XXVIஇன் நோக்கத்திற்காக, ஓர் உரிமையியல் நீதிமன்றமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VII

### பல்வகைப்பட்டவை

அதிகார அமைப்புகள், குழுக்கள் மற்றும் மக்கள் நீதிமன்றங்களின் உறுப்பினர்களும் பணியாளர் தொகுதியினரும் அரசுப் பணியாளர்களாவர்.

[1][23. மைய அதிகார அமைப்பு, மாநில அதிகார அமைப்புகள், மாவட்ட அதிகார அமைப்புகள், உச்சநீதிமன்ற சட்டப் பணிகள் குழு, உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழுக்கள், வட்டார சட்டப் பணிகள் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர் - செயலர் அல்லது, நேர்வுக்கேற்ப, செயலர் மற்றும் அத்தகைய அதிகார அமைப்புகள், குழுக்கள் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் பிற பணிபுரிபவர்கள் உள்ளடங்கலான உறுப்பினர்களும், மக்கள் நீதிமன்றங்களின் உறுப்பினர்களும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 21இன் பொருளின்படி அரசுப் பணியாளர்களாகக் கொள்ளப்படுவர்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு பாதுகாப்பு.

24. இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி அல்லது அதன்படி வகுக்கப்பட்ட விதி அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதன்படியும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக் கருதப்பட்ட எதற்காகவும்—

(அ) மைய அரசாங்கத்திற்கு அல்லது மாநில அரசாங்கத்திற்கு,

(ஆ) மைய அதிகார அமைப்பின் தலைமைப் புரவலர், ஆட்சித்துறைத் தலைவர், உறுப்பினர்கள் அல்லது உறுப்பினர் - செயலர் அல்லது அலுவலர்கள் அல்லது பிற பணிபுரிபவர்களுக்கு,

(இ) மாநில அதிகார அமைப்பின் தலைமைப் புரவலர், ஆட்சித்துறைத் தலைவர், உறுப்பினர், உறுப்பினர் - செயலர் அல்லது அலுவலர்கள் அல்லது பிற பணிபுரிபவர்களுக்கு,

(ஈ) உச்ச நீதிமன்ற சட்டப்பணிகள் குழு, உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுக்கள், வட்டார சட்டப்பணிகள் குழுக்கள் அல்லது மாவட்ட அதிகார அமைப்பு ஆகியவற்றின் தலைவர், செயலர், உறுப்பினர்கள் அல்லது அலுவலர்கள் அல்லது பிற பணி புரிபவர்களுக்கு, அல்லது

1. சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994) இன் பிரிவு 17 ஆம் முன் பிருந்த பிரிவுகள் 23 மற்றும் 24-க்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

(உ) உட்கூறுகள் (ஆ) முதல் (ஈ) வரையிலானவற்றில் சுட்டப்பட்ட தலைமைப் புரவலர், ஆட்சித்துறைத் தலைவர், தலைவர், உறுப்பினர், உறுப்பினர் - செயலர் ஆகியோரில் எவராலும் அதிகாரமளிக்கப்பெற்ற பிற நபர் எவருக்கும்

[எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்டமுறை நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது].

இந்தச் சட்டத்தின் மேலோங்கி நிற்கும் செல்திறன்.

25. அவ்வப்போது செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது இந்தச் சட்டம் அல்லாத பிற சட்டம் எதன் காரணமாகவும் செல்திறமுடைய முறையாவணம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் வகையங்கள், செல்திறம்பெறும்.

இடர்ப்பாடுகளைஅகற்றுவதற்கான அதிகாரம்.

26. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசாங்கம், அதிகார முறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணை வாயிலாக, அந்த இடர்ப்பாடுகளை அகற்றுவதற்குத் தேவையானது அல்லது உகந்தது என்று தனக்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணானதாக இராத வகையங்களைச் செய்யலாம்;

வரம்புரையாக : இந்தச் சட்டம், குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றதிலிருந்து இரண்டு ஆண்டுக் காலஅளவு கழிவுற்ற பின்பு, அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

விதிகள் வகுப்பதற்கு மைய அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.

[1][27. (1) மைய அரசாங்கம், இந்தியத் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கு விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம். அவையாவன :—

(அ) பிரிவு 3இன் உட்பிரிவு (2)இன் கூறு (இ)இன்படி மைய அதிகார அமைப்பின் பிற உறுப்பினர்களின் எண்ணிக்கை, பட்டறிவு மற்றும் தகுதிப்பாடுகள் ;

(ஆ) பிரிவு 3இன் உட்பிரிவு (3)இன்படி மைய அதிகார அமைப்பின் உறுப்பினர் - செயலருடைய பட்டறிவும் தகுதிப்பாடுகளும் மற்றும் அவரது அதிகாரங்களும், செயற் பணிகளும் ;

(இ) பிரிவு 3இன் உட்பிரிவு (4)இன்படி மைய அதிகார அமைப்பின் உறுப்பினர்களின் மற்றும் உறுப்பினர் - செயலரின் பதவி வரையுரைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக்கட்டுகள் ;

(ஈ) பிரிவு 3இன் உட்பிரிவு (5)இன்படி மைய அதிகார அமைப்பின் அலுவலர்களின் மற்றும் பிற பணிபுரிபவர்களின் எண்ணிக்கை ;

(உ) பிரிவு 3இன் உட்பிரிவு (6)இன்படி மைய அதிகார அமைப்பின் அலுவலர்களின் மற்றும் பிற பணிபுரிபவர்களின் பணிவரைக்கட்டுகள் மற்றும் வரையூதியம் மற்றும் படித்தொகைகள் ;

(ஊ) பிரிவு 3 அ வின் உட்பிரிவு (2)இன் கூறு (ஆ)இன்படி உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, பட்டறிவு மற்றும் தகுதிப்பாடுகள் ;

(எ) பிரிவு 3 அ வின் உட்பிரிவு (3)இன்படி உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழுவின் செயலாளரது பட்டறிவு மற்றும் தகுதிப்பாடுகள் ;

(ஏ) பிரிவு 3 அ வின் உட்பிரிவு (5)இன்படி உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழுவின் அலுவலர்களின் மற்றும் பிற பணிபுரிபவர்களின் எண்ணிக்கை மற்றும் அந்தப் பிரிவின் உட்பிரிவு (6)இன்படியான பணிவரைக்கட்டுகள் மற்றும் அவர்களுக்கு வழங்கத்தக்க வரையூதியமும் படித்தொகைகளும் ;

1. சட்டப்பணிகள் அதிகார அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 1994 (59/1994)இன் பிரிவு 18 ஆல் பிரிவுகள் 27, 28 மற்றும் 29க்கு மாற்றாக அமைக்கப்பட்டன.

(ஐ) அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தின் முன்பு இருக்குமாயின் பிரிவு 12-ன் கூறு (ஏ)இன்படி சட்டப் பணிகளுக்கு அவரை உரிமை கொண்டவராக்கும் ஒரு நபருடைய ஆண்டு வருமானத்தின் மேல்வரை ;

(ஒ) பிரிவு 18இன்படி எந்த முறையில் மைய அதிகாரஅமைப்பு, மாநில அதிகாரஅமைப்பு அல்லது மாவட்ட அதிகாரஅமைப்பின் கணக்குகள் வைத்துவரப்படுதல் வேண்டுமோ அந்த முறை ;

(ஓ) பிரிவு 19இன் உட்பிரிவு (3)இல் குறித்துரைக்கப்பட்டுள்ள உச்ச நீதிமன்ற சட்டப்பணிகள் குழுவினால் அமைத்து நடத்தப்படும் மக்கள் நீதிமன்றத்தின் பிற பணியாளர்களது பட்டறிவும் தகுதிப் பாடுகளும் ;

(ஔ) பிரிவு 22இன் உட்பிரிவு (1)இன் கூறு (உ)இன்படியான பிற பொருட்பாடுகள் ;

(க) வகுத்துரைக்கப்படவேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

**விதிகள் வகுப்பதற்கு மாநில அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.**

28. (1) மாநில அரசாங்கம், உயர்நீமன்றத்திதின் தலைமை நீதிபதியுடன் கலந்தாய்வு செய்து, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கு விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப் பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம்; அவையாவன :—

(அ) பிரிவு 6இன் உட்பிரிவு (உ) இன்கூறு (இ)இன்படி மாநில அதிகார அமைப்பின் பிற உறுப்பினர்களின் எண்ணிக்கை, பட்டறிவு மற்றும் தகுதிப்பாடுகள் ;

(ஆ) பிரிவு 6இன் உட்பிரிவு (3)இன்படி மாநில அதிகாரஅமைப்பின் உறுப்பினர்-செயலரது அதிகாரங்களும், செயற்பணிகளும் ;

(இ) பிரிவு 6இன் உட்பிரிவு (4)இன்படி மாநில அதிகாரஅமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்-செயலரது பதவி வரையுரைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக் கட்டுகள் ;

(ஈ) பிரிவு 6இன் உட்பிரிவு (5)இன்படி மாநில அதிகாரஅமைப்பின் அலுவலர்கள் மற்றும் பிற பணிபுரிபவர்களின் எண்ணிக்கை ;

(உ) பிரிவு 6-இன் உட்பிரிவு (6)இன்படி மாநில அதிகாரஅமைப்பின் அலுவலர்கள் மற்றும் பிற பணிபுரிபவர்களின் பணிவரைக்கட்டு கள் மற்றும் வரைஊதியம் மற்றும் படித்தொகைகள் ;

(ஊ) பிரிவு 8இன் உட்பிரிவு (3)இன்படி உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுவின் செயலாளரது பட்டறிவும், தகுதிப்பாடு களும் ;

(எ) பிரிவு 8இன் உட்பிரிவு (5)இன்படி உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழுவின் அலுவலர்கள் மற்றும் பிற பணிபுரிபவர்களின் எண்ணிக்கை மற்றும் அந்தப் பிரிவின் உட்பிரிவு (6)இன்படியான பணிவரைக்கட்டுகளும், அவர்களுக்கு வழங்கத்தக்க வரைஊதியமும் படித்தொகைகளும் ;

(ஏ) பிரிவு 9இன் உட்பிரிவு (2)இன் கூறு (ஆ)இன்படி மாவட்ட அதிகார அமைப்பின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, பட்டறிவு மற்றும் தகுதிப்பாடுகள்.

(ஐ) பிரிவு 9இன் உட்பிரிவு 5 இன்படி மாவட்ட அதிகார அமைப் பின் அலுவலர்கள் மற்றும் பிற பணிபுரிபவர்களின் எண்ணிக்கை;

(ஒ) பிரிவு 9இன் உட்பிரிவு 6 இன்படி மாவட்ட அதிகார அமைப்பின் அலுவலர்கள் மற்றும் பிற பணிபுரிபவர்களின் பணி வரைக் கட்டுகள் மற்றும் வரையூதியமும் படித் தொகைகளும்;

(ஓ) பிரிவு 11இன் உட்பிரிவு 2 இன் கூறு (ஆ)இன்படி வட்டாரச் சட்டப்பணிகள் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, பட்டறிவு மற்றும் தகுதிப்பாடுகள்;

(ஔ) பிரிவு 11இன் உட்பிரிவு (3)இன்படி வட்டாரச் சட்டப் பணிகள் குழுவின் அலுவலர்கள் மற்றும் பிற பணிபுரிபவர்களின் எண்ணிக்கை;

(க) பிரிவு 11 (அ)இன் உட்பிரிவு (4)இன்படி வட்டார சட்டப் பணிகள் குழுவின் அலுவலர்கள் மற்றும் பிற பணிபுரிபவர்களின் பணிவரைக்கட்டுகள் மற்றும் வரையூதியமும் படித் தொகைகளும்;

(ங) வழக்கானது உச்சநீதிமன்றம் அல்லாத பிற நீதிமன்றம் ஒன்றின் முன்பு இருக்குமாயின், பிரிவு 12இன் கூறு (ஏ)இன் படி சட்டப்பணிகளுக்கு அவரை உரிமை கொண்டவராக்கும் நபரது ஆண்டு வருமானத்தின் மேல்வரை;

(ச) பிரிவு 19இன் உட்பிரிவு (4)இல் குறிப்பிடப்பட்டவை அல்லாத பிற மக்கள் நீதிமன்றத்தின் பிற நபர்களின் பட்டறிவும் தகுதிப்பாடுகளும்;

(ஞ) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

ஒழுங்குறுத்தும் விதிகள் வகுப்பதற்கு மைய அதிகார அமைப்பிற்குள்ள அதிகாரம்.

29. (1) மைய அதிகார அமைப்பு, அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செல்திறப்படுத்தும் நோக்கங்களுக்காக எந்தப் பொருட்பாடுகளுக்கு வகை செய்வது தேவையாக இருக்கிறதோ அல்லது உகந்ததாக இருக்கிறதோ அந்தப் பொருட்பாடுகள் அனைத்திற்கும் வகை செய்வதற்கு இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும் அதன்படி வகுக்கப்பட்ட விதிகளுக்கும் முரணாக இல்லாத ஒழுங்குறுத்தும் விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப் பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய ஒழுங்குறுத்தும் விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:—

(அ) பிரிவு 3 (அ)இன் உட்பிரிவு (1)இன்படி உச்சநீதிமன்ற சட்டப் பணிகள் குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்;

(ஆ) பிரிவு 3 (அ)இன் உட்பிரிவு (4)இன்படி உச்சநீதிமன்ற சட்டப் பணிகள் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளரின் பணி வரையுரைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக்கட்டுகள்.

ஒழுங்குறுத்தும் விதிகள் வகுப்பதற்கு மாநில அதிகார அமைப்புக்குள்ள அதிகாரம்.

29 (அ) (1) மாநில அதிகார அமைப்பு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செல்திறப்படுத்தும் நோக்கங்களுக்காக, எந்தப் பொருட்பாடுகளுக்கு வகைசெய்வது தேவையாக இருக்கிறதோ அல்லது உகந்ததாக இருக்கிறதோ அந்தப் பொருட்பாடுகள் அனைத்திற்கும் வகை செய்வதற்கு, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும அதன்படி வகுக்கப்பட்ட விதிகளுக்கும் முரணாக இல்லாத ஒழுங்குறுத்தும் விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், மேற்சொன்ன அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய ஒழுங்குறுத்தும் விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன :—

(அ) பிரிவு 7இன் உட்பிரிவு (2)இன் கூறு (ஈ)ன்படி மாநில அதிகார அமைப்பினால் புரியப்பட வேண்டிய பிற செயற்பணிகள்;

(ஆ) பிரிவு 8 (அ)இன் உட்பிரிவு (1)இன்படி உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்;

(இ) பிரிவு 8 (அ) இன் உட்பிரிவு (2)இன் கூறு (ஆ)இன்படி உயர் நீதிமன்ற சட்டப்பணிகள் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, பட்டறிவு மற்றும் தகுதிப்பாடுகள்;

(ஈ) பிரிவு 8 (அ)இன் உட்பிரிவு (4)இன்படி உயர்நீதிமன்ற சட்டப் பணிகள் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளரின் பதவி வரையுரைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக்கட்டுகள் ;

(உ) பிரிவு 9இன் உட்பிரிவு (4)இன்படி மாவட்ட அதிகார அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளரின் பதவி வரையுரைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக்கட்டுகள் ;

(ஊ) பிரிவு 8 Ⓐஇன் உட்பிரிவு (2)இன் கூறு (ஆ)இன்படி உயர் நீதிமன்ற சட்டப்பணிகள் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, பட்டறிவு மற்றும் தகுதிப்பாடுகள்;

(எ) பிரிவு 10இன் உட்பிரிவு (2)இன் கூறு (இ)இன்படி மாவட்ட அதிகார அமைப்பினால் புரியபட வேண்டிய பிற செயற் பணிகள்;

(ஏ) பிரிவு 11 Ⓐஇன் உட்பிரிவு (3)இன்படி வட்டாரச் சட்டப் பணிகள் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் செயலாளரின் பதவி வரையுரைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற வரைக்கட்டுகள்.

**விதிகளையும் ஒழுங்குறுத்தும் விதிகளையும் முன்வைத்தல்.**

30. (1) மைய அரசாங்கத்தினால் இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், மற்றும் மைய அதிகார அமைப்பினால் வகுக்கப்படும் ஒழுங்குறுத்தும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது ஒரு கூட்டத் தொடராகவோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்கள் கொண்ட ஒரு கால அளவிற்கு அமர்வில் இருக்கையில், அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும். மேலும் மேற்சொன்ன கூட்டத் தொடரை அல்லது கூட்டத் தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத் தொடர்கள் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் அல்லது ஒழுங்குறுத்தும் விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக் கொள்ளுமாயின் அல்லது அந்த விதி அல்லது ஒழுங்குறுத்தும் விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதுவும் அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்; அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி அல்லது ஒழுங்குறுத்தும் விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந் தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின்படி ஒரு மாநில அரசாங்கத்தினால் வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், மற்றும் அதன்படி ஒரு மாநில அதிகாரஅமைப்பினால் வகுக்கப்படும் ஒழுங்குறுத்தும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.